**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2013–14 ஆம் நிதியாண்டு சுதந்திர தின விழா 2013 –மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்தவர்களுக்கு தமிழக அரசின் விருதுகள் வழங்கியது– கூடுதல் நிதி ரூ.1,37,000/– ஒப்பளிப்பு செய்வது ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.17 நாள்: 20–03–2014
விஜய, பங்குனி 6,
திருவள்ளுவர் ஆண்டு 2045
படிக்க:

1. அரசாணை(டி) எண்.03, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை,நாள் 03–06–2013.
2. அரசாணை(பத்தாண்டு)எண்.8, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள்06–08–2013.
3. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.2250/மா.தி.ந.3.1/2013, நாள் 2.9.2013.

–––––

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2013–14 ஆம் நிதியாண்டில், 2013 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவில் மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென சிறப்பாக சேவை புரிந்த நபர்கள் / நிறுவனங்களுக்கு, தமிழக அரசு விருதுகளை வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவும் அதற்கென செலவின தொகையாக ரூ.3,25,000/– மட்டும் ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. தற்போது முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம், சிறந்த மருத்துவர், சிறந்த தனியார் தொழிலதிபர், சிறந்த சமூகப் பணியாளர், சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஆகியன தலா ஒன்று வீதம் சுதந்திர தின விழா அன்று வழங்கிடவும், சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர் விருதினை, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் வழங்கிடவும், அதற்கான செலவினம் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளதனை குறிப்பிட்டு, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் கூடுதலாக 2 சிறந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு விருது வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளதனையும் குறிப்பிட்டு, ஆக மொத்தம் 8 விருதாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்றும், எனவே, 8 தங்கப் பதக்கம் வழங்குவதற்காக கூடுதலான தொகையாக ரூ.87,000/– நிதி ஒப்பளிப்பு தேவைப்படுவதாகவும், மேலும் கூடுதலாக 2 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விருது வழங்கிட தேர்வு

செய்யப்பட்டுள்ளதால் கூடுதலாக ரூ.50,000/–ம் ஆக மொத்தம் ரூ.1,37,000/– கூடுதல் நிதி ஒப்பளிக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் கூடுதலாக 2 சிறந்த மாவட்ட ஆட்சியாளர் உட்பட, 8 விருதுகள் வழங்கிட ஆணையிட்டதுக்கு ஏற்ப, ரூ.1,37,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்து ஏழாயிரம் மட்டும்) கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே, பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட, நிதி ரூ.1,37,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்து ஏழாயிரம் மட்டும்) கீழ்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:–

" 2235– சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன் –001–நெறிப்படுத்தலும் நிருவாகமும்–I திட்டத்தில் சேராதது AF- இயலாமையுற்றோர் மறுவாழ்வு இயக்ககம்–59–பரிசுகளும் வெகுமதிகளும்"

(து.தொ.கு. 2235 02 001 AF 5906)

5. இவ்வாணை நிதித்துறையின்ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. நிதித்துறை அ.சா.எண்.15353/நிதி(சந)/14, நாள் 19.3.14ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–35.

**நகல்:-**
நிதி (சந) துறை, சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி .

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.